<u>**DEPOSITION OF WITNESS**</u>

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : S. T. C. No. 898/2024**

**Prosecution Witness : P. W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபன் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 21/01/2026

Accused Present.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**</u>

எதிரி தரப்பில் என்னுடைய அப்பாவிற்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தான் மசா.ஆ.6 என்றால், சரிதான். 19.02.2024ல் அது அனுப்பப்பட்டுள்ளது என்றால், சரிதான். மசா.ஆ.3 09.03.2024ல் என்னுடைய தந்தை அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால், சரிதான். மசா.ஆ.3ல் மசா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதாக உள்ளது என்றால், சரிதான். மசா.ஆ.1 வழக்கு காசோலை 31.01.2024 தேதியிட்டதை என் தந்தை வங்கியில் 21.02.2024ல் பணம் பெற சமர்ப்பித்தார் என்றால், சரிதான். எதிரி அந்த காசோலையை Stop Payment என்று அறிவுறுத்தி இருந்ததால் பணம் கிடைக்கப்பெறாமல், 22.02.2024ல் திருப்பப்பட்டது என்றால், சரிதான். எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை என் தந்தை பெற்றுக் கொண்ட பின்பு தான் வழக்கு காசோலையை வங்கியில் சமர்ப்பித்திருக்கிறார் என்றால், சரிதான். வழக்கு காசோலை மேற்படி காரணத்தால் திருப்பப்பட்ட பிறகு தான் மசா.ஆ.3 பதில் அறிவிப்பு எனது தந்தை 09.03.2024ல் எதிரி வழக்கறிஞருக்கு அனுப்பியிருக்கிறார் என்றால்,

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

சரிதான். வழக்கு காசோலை மேற்படி காரணத்தால் திருப்பப்பட்ட பிறகு சட்டப்பூர்வ அறிவிப்பு 15 நாட்களுக்குள் என் தந்தை அனுப்பவில்லை என்றால், சரிதான். காசோலை 22.02.2024ல் திருப்பப்பட்ட பிறகு எங்கள் தரப்பில் பதில் அறிவிப்பு 09.03.2024ல் தான் வழங்கியிருக்கிறோம் என்றால், சரிதான்.

என் தந்தை தனிநபர் முறையீடு செய்த இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால், சரிதான். எனது தந்தை முறையீட்டு மனுவில் என்ன சங்கதிகள் கூறியிருந்தாலோ அதை தழுவியே நானும் என்னுடைய பிரமாணத்தை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். என் தந்தை போட்ட முறையீட்டு மனுவில் 3ம் பத்தியில் எதிரி தெய்வசிகாமணி, முரளி ஆகியோர் மூலமாக நிலத்தை வந்து பார்வையிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். அச்சமயத்தில் நானும் உடனிருந்ததாக என்னுடைய தந்தை முறையீட்டு மனுவில் சொல்லவில்லை என்றால், சரிதான். ஆனால் என்னுடைய பிரமாணத்தில் நிலம் பார்வையிடும் சமயத்தில் நானும் என் தந்தையுடன் இருந்ததாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான்.

மேற்படி விவரத்தை தவிர என் தந்தை தாக்கல் செய்த முறையீட்டு மனுவில் உள்ள மற்ற சங்கதிகள் நடைபெற்ற போது நான் உடனிருந்ததாக எங்கும் என்னுடைய பிரமாணத்தில் தெரிவிக்கவில்லை என்றால், சரிதான். அதனால் எதிரிக்கும் என் தந்தைக்கும் என்ன பரிவர்த்தனை நடந்தது என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரிய வாய்ப்பில்லை என்றால், சரியல்ல. எதிரி வாங்கியதாக சொல்லும் நிலத்தின் மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால், முதலில் 58 என்று சொன்ன சாட்சி பின்னர் 59 சென்ட் என்று சொன்னார். அதன் சர்வே எண் என்னவென்றால், 80/1 ஆகும்.

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

மேற்படி அந்த 59 சென்ட் நிலம் எங்கு உள்ளது என்றால், மாம்பட்டு கிராமத்தில் தார் ரோட்டை ஒட்டியது போல் உள்ளது. அந்த நிலத்திற்கு உரிமையாளர் யார் என்றால், உரிமையாளர் பெயர் தெரியவில்லை. உரிமையாளரின் மனைவி கலாவதி ஆகும். மேற்படி சொத்தை விற்கும் உரிமை யாருக்கு உள்ளது என்றால், கலாவதிக்கு உள்ளது. என்னுடைய தந்தை மேற்படி சொத்தை எதிரிக்கு விற்பனை செய்ய முன் தொகையாக பல்வேறு தேதிகளில் பல தவணைகளில் ரூ.2 லட்சம் வரை பெற்றுக் கொண்டு அதற்கு எதிரிக்கு ரசீதும் கொடுத்திருக்கிறார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

மேற்படி 59 சென்ட் நிலம் என்ன வகை என்றால், முள் மரங்கள் மற்றும் பனை மரங்கள் நிறைந்திருந்தது. என் தந்தை நில வியாபாரத்தில் தரகராக செயல்பட்டார் என்றால், சரிதான். மேற்படி நிலம் எவ்வளவு ரூபாய்க்கு விற்பதாக பேசப்பட்டது என்றால், ரூ.35 லட்சம் ஆகும். தரகர் என்ற முறையில் என் தந்தைக்கு எவ்வளவு பணம் தர வேண்டி உள்ளது என்றால், ரூ.8,85,000/– ஆகும். 59 சென்ட் நிலத்தை சுத்தம் செய்யும் போது நான் உடனிருந்தேனா என்றால், இருந்தேன். அந்த சுத்தம் செய்யும் இயந்திரம் எவ்வளவ நேரம் இயங்கியது என்றால், ஒரு வாரம் முழுக்க இயங்கியது. அந்த ஜேசிபி இயந்திரத்தின் எண் மற்றும் உரிமையாளர் பற்றி தெரியுமா என்றால், தெரியாது. எவ்வளவு தொகை அதற்கு என் தந்தை கொடுத்தார் என்றால், எனக்கு தெரியாது.

என் தந்தை எங்கள் பகுதியில் அரசியலில் என்ன பதவியில் இருந்தார் என்றால், அதிமுகவில் ஒன்றிய துணை செயலாளராக இருந்தார். அது மட்டுமில்லாமல் ஊராட்சி மன்ற தலைவராகவும் இருந்தார். மேற்படி சொத்தானது கலாவதிக்கு முன்பு யாரிடம்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

இருந்தது என்றால், என் தந்தை தான் பவர் பத்திரம் போட்டு அவர் கட்டுப்பாட்டில் வைத்திருந்து பின்னர் கலாவதியின் கணவருக்கு விற்றுவிட்டார். என் தந்தைக்கு அந்த சொத்தில் முழு உரிமை இருந்ததா என்றால், இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA